
## திராவிடத்தால் வாழ்கிறோம்

945

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

125

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கந்திலி மா.மாரப்பன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# கந்திலி மா.மாரப்பன்
# கழகம் வளர்த்த கலகக்காரர்!

அன்றைய வட ஆற்காடு மாவட்டத்தில், ஆம்பூர் வட்டக் கழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளகர்த்தர். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவராக வழிநடத்தியவர். பேரறிஞர் அண்ணா கண்ட தம்பிகளில் ஒருவர். கலைஞருக்கு அரசியலிலும் சினிமாவிலும் கிடைத்த திருப்பத்தூர் நண்பர்களில் ஒருவர். திராவிடக் கொள்கைப் பற்றாளர், கலைஞர் மீதும் கழகத்தின் மீதும் தீராத பாசம் கொண்டவர். திராவிட இயக்க தீரர்கள் வரிசையில் போற்றுதலுக்குரியவர் கந்திலி மா.மாரப்பன்.

திருப்பத்தூர் நகருக்கு அருகில் உள்ள குரும்பேரிதான் சொந்த ஊர். ஓரளவு பொருளாதார செல்வாக்கு கொண்ட குடும்பப் பின்புலத்தில் பிறந்தவர். பெற்றோர் மாரப்பன்-மாரியம்மாள். திருப்பத்தூரில் உயர்நிலைப் பள்ளிவரை படித்தவர், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, 15 வயதிலேயே அரசியல் களத்துக்கு வந்தார். கிராமத்தில் அனைவருடனும் அன்புடன் பழகும் மாரப்பன் 18 வயதிலேயே அந்த ஊரின் ஊராட்சி மன்றத் தலைவரானார்.

ஆம்பூர் வட்டக் கழகத்தில் ஐந்து கிளை மட்டுமே இருந்த தொடக்கக் காலத்தில், குரும்பேரி கிளையும் அதில் ஒன்று. இளைஞராக, குரும்பேரி ஊராட்சி மன்றத் தலைவராக, சைக்கிளில் பயணம் செய்து கழகப் பணியாற்றிய காலங்களில், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆலங்காயம், கந்திலி, நாட்றம்பள்ளி பகுதிகளில் கழக முன்னோடிகளுடன் இணைந்து கிளைக் கழகத்தைக் கட்டியவர்களில் ஒருவர். குரும்பேரி மாரப்பன் என்றால், திருப்பத்தூர் சுற்றுவட்டாரத்தில் அறியாதவர்களே இருக்க முடியாது.

1954-ஆம் ஆண்டு வேலூரில், வட ஆற்காடு மாவட்ட 2-வது மாநாடு. முதல்நாள் சமூக சீர்திருத்த மாநாடும், இரண்டாம் நாள் அரசியல் மாநாடுமாக இரண்டு நாட்களும் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், என்.வி.நடராசன், ப.உ.சண்முகம், ஏ.கோவிந்தசாமி என பலர் வருகை தந்தனர். மாநாட்டு வரவேற்புக் குழுவில் இருந்த கழக நிர்வாகிகள் முல்லை சக்தி, எம்.பி.சாரதி ஆகியோருடன் பம்பரமாகச் சுழன்றவர் மாரப்பன்.

### சகோதரத்துவமே கழகம்!

குரும்பேரி மாரப்பனும் அதே கிராமத்தைச் சேர்ந்த 'பொடியன்' என்கிற திம்மராயனும் பிரித்துப் பார்க்க முடியாத உடன்பிறப்புகள். பொடியன் பட்டியலினத்தைச் சேர்ந்தவர். கழகத்தின் அரசியல் எழுச்சியில் மேலேறி வளர்ந்து வந்தவர். பேரறிஞர் அண்ணாவின் மீதும் தீரா பற்றுக் கொண்டிருந்தவர். பொடியனின் கழக ஆர்வம், மாரப்பனுடன் இணைத்தது. இருவரும் சேர்ந்து திருப்பத்தூர் பகுதி முழுவதும் சைக்கிளிலேயே சென்று கழகப் பணிகளை மேற்கொள்வர்.

பொடியனுடன் சேர்ந்து பணியாற்றுவதை, அவரது ஊரில் உள்ளவர்களும், உறவினரும் கண்டிக்கின்றனர். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும், சமூக நீதியையும் கற்பிக்கும் கட்சி. கட்சியில் சாதிப் பாகுபாடுகளுக்கு இடமில்லை என அனைவருக்கும் உரக்கச் சொல்லிவிட்டு பொடியனுடன் இணைந்தே கழகப் பணிகளைச் செய்தவர்.




கழகப் பற்றும், அவர் விரும்பிய சமூக மாற்றமும், பொடியனிடம் கொண்டிருந்த மாறா நட்பும் சமத்துவத்தை வலியுறுத்துவதாக இருந்துள்ளது. 'மாரப்பன் மாறவில்லை' என அவரது தாய் அவரை வீட்டுக்குள் அனுமதிக்காமல் இருந்தும் பார்த்தார். அப்படியும் மாரப்பன் மாறவில்லை. மாறாக, பட்டியலின தோழர்களை வீட்டுக்கு வரவழைத்து, சமத்துவம் பேணவே முன்நின்றவர். அதுதான் மக்கள் மத்தியில் கழகத்தினர் குறித்த நம்பிக்கையை விதைத்தது. அந்த நம்பிக்கைதான், தொடர்ந்து 25 ஆண்டுகள் குரும்பேரி ஊராட்சி மன்றத் தலைவராக தொடர வைத்தது. அந்த நம்பிக்கைதான் 1967-ஆம் ஆண்டில், கந்திலி ஒன்றிய சேர்மனாக தேர்ந்தெடுக்க வழிவகை செய்தது. தொடர்ந்து, 10 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்தார் மாரப்பன்.

### கழகப் பணிகள்

1977-ஆம் ஆண்டில், மாரப்பன் அவர்களுக்கு நாட்றம்பள்ளி தொகுதி வேட்பாளராக நிற்க வாய்ப்பளித்தார் கலைஞர். அன்றையச் சூழலில் அவரால் வெற்றிபெறமுடியவில்லை என்றாலும், கழகப் பணிகளில் சோர்வடைந்த தில்லை. கந்திலி ஒன்றியக் கழகச் செயலாளராகத் தொடர்ந்து 5 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒன்றியத்தின் அத்தனை கிராமங்களிலும் கிளைக் கழகத்தைக் கட்டினார்.

> "இளைஞர் அணி தலைமை அலுவலகமான 'அன்பகம்' கட்டுவதற்கு தமிழ்நாட்டிலேயே முதல் தவணையாக 40 ஆயிரம் ரூபாயை வசூலித்துக் கொடுத்தவர் குரும்பேரி மாரப்பன். அதற்காக கலைஞர் கைகளால் கணையாழி அணிவிக்கப் பெற்றவர்."

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழக முன்னோடிகள், தி.சி.திம்மராயர், என்.கே.ராஜா, சி.ஜே. சின்னராஜி, புலவர் கோவிந்தன், முல்லை சக்தி, ஆம்பூர் சம்பங்கி ஆகியோருடனும், பின்னர் அடுத்த தலைமுறை கழகத்தினருடனும் இணைந்து பயணித்தவர்.

"குரும்பேரி மாரப்பன் அவர்கள் கழகத்திற்கு ஆற்றிய பணிகள் சொல்லி மாளாது. சாதி இறுக்கத்தைத் தளர்த்தியவர். கழகத்தை நிலைநிறுத்தி அனைவரும் உடன்பிறப்புகளாக சகோதரத்துவத்துடன் வாழ வழி அமைத்தவர். மிசா காலத்தில், அவருடன் சிறையில் இருந்திருக்கிறேன். நான் மாவட்டச் செயலாளராக தேர்வானபோது, மாரப்பன் அவர்கள் அவைத் தலைவராக இருந்து வழிநடத்தினார் என்கிறார், வேலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் தி.அ.முகமது சகி.

கழகம் அறிவிக்கும் அத்தனை போராட்டங்களும் கந்திலி ஒன்றியத்தில் தீவிரமாக எதிரொலிக்கும். விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் சிறை சென்றவர். கந்திலி ஒன்றியத்துக்கு தந்தை பெரியார் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, கலைஞர் என அனைவரையும் அழைத்து வந்து, கூட்டங்கள் நடத்தி இருக்கிறார். கழக சொற்பொழிவாளர்கள் அத்தனை பேரும் கந்திலி ஒன்றியத்தில் பேசியிருப்பார்கள் என்கின்றனர் கழகத்தினர்.

"மாரப்பன் அவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்பது, அவர் கழகப் பணிகளுக்கு செலவு செய்வதற்கு தங்கு தடையில்லாமல் இருந்தது. தனக்குச் சொந்தமான 'டெண்டு கொட்டகை' என்கிற அக்கால திரை அரங்குகளில் கிடைத்த வருமானத்தையும், பேருந்து சர்வீஸ் வருமானத்தையும் கழகப் பணிகளுக்கே செலவிட்டார் என்கின்றனர்.

இளைஞர் அணி தலைமை அலுவலகமான 'அன்பகம்' கட்டுவதற்கு தமிழ்நாட்டிலேயே முதல் தவணையாக 40 ஆயிரம் ரூபாயை வசூலித்துக் கொடுத்தவர் குரும்பேரி மாரப்பன். அதற்காக கலைஞர் கைகளால் கணையாழி அணிவிக்கப் பெற்றவர்.

2000-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் அவர் உடல்நலம் இல்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அமைச்சர் ஆற்காட்டாரை அனுப்பி, நலம் விசாரித்தார் கலைஞர். 14.12.2000 அன்று அவர் மறைந்தபோது, கலைஞரின் இரங்கல் கடிதம் அவர் புகழைப் போற்றியது.

கந்திலி மாரப்பன் அவர்கள் மறைந்து 25 ஆண்டுகளைக் கடந்தும், கந்திலி ஒன்றியம், திருப்பத்தூர் நகர மக்கள் அவர் நினைவைப் போற்றுகின்றனர். அவர் இயங்கி வந்த கழக அலுவலகம், இன்றும் இயங்கி வருகிறது. அவர் உருவாக்கிய ஒற்றுமை உணர்வு என்றென்றும் நிலைத்திருக்கும்.

...துடிக்கும்

## குஜராத்தின் ஊழல் மாடல்!

தேர்தல் ஆணைய முறைகேடுகளைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வரும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, குஜராத்தில் அடையாளம் தெரியாத கட்சிகளின் பெயரால் நிகழ்த்தப்பட்ட மெகா ஊழல்களை, அம்பலப்படுத்தி இருக்கிறார். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 10 சிறிய கட்சிகள், 2019 -ஆம் ஆண்டு முதல் 2024- ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்தில் 4,300 கோடி ரூபாய் நன்கொடை பெற்றுள்ளன. சவுராஷ்டிரா ஜனதா கட்சி, இந்திய மக்கள் மன்றம், புதிய இந்தியா ஐக்கிய கட்சி, சுதந்திரப் பேச்சு கட்சி, சத்யவாதி ரக்ஷத், பாரதிய தேசிய ஜனதா தளம் உள்ளிட்ட 10 சிறிய கட்சிகளுக்கு எப்படி 4,300 கோடி ரூபாய் நன்கொடை வந்தது என்பதே ராகுல் காந்தி எழுப்பும் கேள்வி.

இந்தக் கட்சிகள் நன்கொடை வாங்கிய காலகட்டத்தில் 2 மக்களவைத் தேர்தல்கள், ஒரு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ளன. மொத்தமே 43 வேட்பாளர்கள்தான் போட்டியிட்டுள்ளனர். 54,069 வாக்குகள் மட்டும்தான் இவர்களுக்கு மொத்தமாகக் கிடைத்துள்ளது. தேர்தல் செலவாக ரூ.39.02 லட்சம் கணக்கு காட்டப்பட்டுள்ளது. ஆனால் 3,500 கோடி ரூபாய் செலவு செய்ததாக தணிக்கை அறிக்கைக் கணக்குகள் கூறுகின்றன.

நிதி வழங்கியது யார்? 3,500 கோடி ரூபாய்க்கு, அந்தக் கட்சிகள் செய்த செலவு என்ன? அக்கட்சிகளின் பின்னணி என்ன? என்பது குறித்தெல்லாம் பலத்த சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. எதிர்க்கட்சிகள் ஆளும் அனைத்து மாநில அரசுகளுக்கும் ஊழல் பட்டம் கட்டும் பா.ஜ.க., தனது சொந்த மாநிலத்தில் நடந்துள்ள இந்தப் பெரும் ஊழல் குறித்து, வாய் திறக்கவே இல்லை. வருமான வரித்துறையோ, அமலாக்கத்துறையோ இதுவரை இவ்விவகாரத்தில் தலையீடு செய்யாமல் மவுனம் காக்கின்றன.

## ப்ளாஷ்பேக்



### மணநாளில் வாழ்த்து பெற்ற பெற்றோர்!



மணிமாறன் தென்றல்

அப்பா 'தென்றல்' செல்வராஜ் பொள்ளாச்சி நகரச் செயலாளராக கழகப் பணியாற்றி, தற்போது கழக சட்டத்திட்டத் திருத்தக்குழு உறுப்பினராக இருக்கிறார். இந்தப் படம் 2013-ஆம் ஆண்டு, அவரது திருமண நாளின்போது அம்மா லதா, அக்கா மணிமாலா, நான் என குடும்பமாகச் சென்று தலைவரைச் சந்தித்து வாழ்த்து பெற்றபோது எடுத்தது. 'என்ன விசேஷம்' என தலைவர் கேட்டதும், அப்பா, 'திருமண நாள் தலைவரே' என்றதும், அற்புதமான நினைவுகள். அப்பா வழியில், நானும் கழகப் பணியில் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சியும், பெருமையும் அளிக்கின்றன.

**– மணிமாறன் தென்றல்,
இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்,
கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மதுரை மாவட்ட மாநாடு!

1955-ஆம் ஆண்டு, ஜனவரி 8 மற்றும் 9-ஆம் தேதிகளில் மதுரை மாவட்டக் கழகம் சார்பில், 2-வது சமூக சீர்திருத்த- அரசியல் மாநாடுகள் நடத்தப்பட்டன. சீர்திருத்த மாநாட்டிற்கு அன்னை சத்தியவாணிமுத்து தலைமை வகித்தார். தோழர் தில்லைவில்லாளன் மாநாட்டைத் திறந்து வைத்தார். அரசியல் மாநாட்டுக்கு கலைஞர் தலைமை வகித்தார். இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் குழுவினர் நடித்த 'சந்திரமோகன்' நாடகமும், எம்.ஜி.ஆர். குழுவினர் நடித்த 'ஆசை நினைவு' நாடகமும் நடைபெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131